உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர் : க. குரோதன-ஆடி. மலர்: ச

உ

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்.

பேராசிரியருரை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்து அச்சிடப்பெற்றுவந்தது வெளி வந்துவிட்டது.*

தஞ்சைமாநகரது மீயுயர் சிறப்பின் பொருட்டினவாய் விளங்குவன முதலாம் இராசராசன் எடுப்பித்த பெரியகோயிலும் (இராசராசேச்சுவரம்), சரபோஜிமன்னன் அமைப்பித்த கலைமகள் மன்றமும்(சரசுவதிமால்)ஆகும். இக்கலைமகள் மன்றத்தே, அமிழ்தினை வென்ற நம் தமிழ்மொழி நூல்களும் ஆரியம், தெலுங்கு, மகாராட்டிரம், ஆங்கிலம் முதலாய ஏனைமொழி நூல்களும் விண்மீனென எண்ணிறந்தன தொகுத்துவைக்கப் பெற்றிருந்தன. நமது பண்டைத் தமிழ்நூல்களாய அரிய இலக்கண இலக்கியச் சுவடிகள் பலவும் ஈங்குத் தொகுத்து வைக்கப் பெற்றிருந்தும், அத்தகைய சுவடிகளின் அருமை பெருமைகளை யுணராத நூனிலையத்துப் பண்டை மேற்பார்வையாளர்கள் தூக்கத்தாலும், அந்நூல்களின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த புலவர்சிலரது ஊக்கத்தாலும் பலப்பல அரியநூல்கள்

* பதிப்பு நலம், விலை நயம் முதலியன புற அட்டையிற் காண்க.

தத்தம் பெயரின்கீழ்ப் பல்வகைய சிறப்பிலா மாற்று நூல்களை நிறீஇ, நாளடைவிற் கரந்து வெளியேறிவிட்டன. ஆயினும், தம்மை அரிதிற்றேடிவைத்த மன்னன் பெருமையினைப் போற்றத் துணிந்தன போன்று, வேற்றுப் பெயர் மேற்கொண்டு மறைந்து கிடந்த சிற்சில அரிய சுவடிகளே, இதுபோதும் எஞ்சியுள்ளன. அங்ஙனம் எஞ்சிய சுவடிகளுள் ஒன்றே ஈங்குக்குறித்த பேராசிரியர் உரையாகும்.

இவ்வுரைச் சுவடி, பக்கற்கு நான்குமுதல் ஒன்பான்வரை வரிகளுள்ள நூற்றைம்பதிற்குச் சற்று மேலாய ஏடுகளைக் கொண்டுள்ளது. சில ஏடுகள் முழுவதும் இன்றியும், சில ஏடுகள் பாதியில் முரிந்தும், சில ஆங்காங்குப் பொடிந்தும் சிதைவுற்று வருதலின், நேன்னற் கண்ட திருமேனி இன்று பிறிதா நிலைதள(ரும்), தன்னைக் காண்போர் யாவர்க்கும் உருக்கத்தினைத் தரும் பான்மையது.

இவ்வுரை தமிழகத்துப் பெரும்புலவர் சில்லோர் கண்ணேக்கம் கொண்டு பாராட்டி எழுதப் பெற்றது. தஞ்சைத் தமிழ்க் கிழவராகிய திருவாளர், இராவ்பகதூர், K. S. சீநிவாசபிள்ளையவர்களும், இச்சங்கத் தலைவர், திருவாளர், உமாமகேசுவரம் பிள்ளையவர்களும் இம்மாபெரும் நூனிலைய மேற்பார்வையினை உற்ற ஒரு சிறுகாலத்தே, தமிழ்மொழிகளிலுள்ள சுவடிகளை ஒருவாறு ஊன்றிப் பார்த்து, நூற்பெயர் விளக்கக்குறிப்பு ஒன்று திட்டம் செய்விக்க முயன்றனராக, அவ்வரிய வேலையினை மேற்கொண்டாரும், கற்றுவல்ல பண்டிதருமாகிய திருவாளர், எல். உலகநாத பிள்ளையவர்களால்–இவ்வுரை மிகச் சிறந்தது, இது அச்சிட்டு வெளியிடத்தக்கவைகளுள் ஒன்றாகும் என எழுதுமாறு வீறுற்றிருப்பது. இத்தகைய சிறப்பினையுடையதேனும் இந்நூல் தமிழ்ப்புலவர்கள், தமிழ்ச்செல்வர்கள் கருத்துக்கட்கு இலக்காகி, அச்சிடப்பெறும் பேற்றினைப் பன்னெடுங்காலம் எய்தாதிருந்தது.

இந்நூலின் அருஞ் சிறப்பினை யுணர்ந்த இச்சங்கம், இதனை அச்சிட்டு வெளியிடும் எண்ணங்கொண்டு துணிவுற்றது. இந்நூல் அச்சிடற்காம் பொருட் செலவிற்கென ஒரு பெருந் தொகையினை, இச்சங்க உறுப்பினரும், பெரும்புலவருமாகிய திருவாளர், மு. கதிரேசச் செட்டியாரவர்கள் விருப்பின்படி, இச்சங்கத்து ஆயுள் உறுப்பினரும், தாய் மொழிப் புரவலர்களின் வழித் தோன்றலுமாகிய பெருந்திருவினர், பலவான்குடி, **ராம. குமு. சு. குமரப்பச் செட்டியாரவர்கள்** தந்துதவினர்கள். உதவவே, சங்கம், வெளியீடுபற்றிய வேலைகளைத் தொடங்கி முடித்தலைச் சிறியேம்பாற் பணித்தது. சங்க அன்பர் சிலர் பல்லாற்றின் உதவினால் திருவருள் ஒருவாறு முற்றுவித்தது.

இவ்வுரைச் சுவடியினைப் பெற்றுப் படியெடுத்தற்கு முபன்ற காலை, விழுமிய பொருள்வளம் சான்று பெருமகிழ் வளித்த இவ்வுரை, கற்றறிஞர் எவராலும் எழுதப் பெறாது, கூலிக்கு எழுதுவோர் எவராலோ எழுதப்பெற்றிருப்பது புலனாயிற்று. ணகர, நகர, னகர வேறுபாடுகளும்; ல, ள, ழ வேறுபாடுகளும் தேறாது எழுதப்பட்ட விடங்கள் பல. ஒருமை, பன்மை முடிபு பிறழ்ச்சிகள் ஆங்காங்குக் காணலாயின. சில விடத்து உரிய நூற்பாவும், சிலவிடத்து உரைப் பகுதிகளும் இலவாகவும், சில விடத்து அவை நிலைமாறியும் காணலுற்றன.

இதன் படியென நூனிலையாளர் எழுதிவைத்திருப்ப தொன்று உளதேனும், அது ஆங்காங்கு மிக்கும் குறைந்தும், பேராசிரியர்உரையும், படியெழுது மோராசிரியர்உரையும் கலந்த தோர் கலவையணி நூலாக விளங்கியது. இப்பேராசிரியர் உரை ஏடுகள் வேறெங்கேனும் உளவாவென அறிய இயன்றவா முயன்றும் பயனெய்திற்றின்று. மேற்கூறிய நிலையினதாகிய இவ் வேடுதானும் சின்னாட்டாழ்த்தின் பயன்படாததாகும் ஏதப் பாட்டினையஞ்சி, இயன்றவாறு கூர்ந்து நோக்கிநோக்கிப் படியெடுத்துக்கொண்டு, சொல்லதிகாரத்து ஏனையுரைகளோடு ஒருவாறு ஒப்புநோக்கி யாய்ந்து அச்சிடலாயிற்று.

சொல்லதிகாரத்து ஏனைய உரைகளாய இளம்பூரணம், சேனாவரையம், நச்சினார்க்கினியம் என்னும் உரைகளொடு இதனை ஒப்பு நோக்குங்கால், இளம்பூரணர் உரையைப் பெரிதும் பின்தொடர்ந்து சேனாவரையரும், இவரைப் பெரிதும் பின்தொடர்ந்து நச்சினார்க்கினியரும் உரையெழுதுதல்போலாது, இஃது அவற்றுள் எதன் தொடர்பும் ஒரு சிறிதும் இலதாகித் தனி நெறிச் செல்லும் தகவுடைய தோருரையாகத் தோன்றிப் பெருவியப்பினை எய்துவித்தது. எனவே, இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளை ஒருவகையாகவும், இதனை வேறு ஒரு வகையாகவும் கொள்ளுதல் வேண்டிற்று. மேலும், நுணுகி நோக்கிய விடத்து ஒரோவிடங்களில், இளம்பூரணர் கொள்கைகளை இப்பேராசிரியர் மறுத்துச்செல்லுதலும், இவர் தம் கொள்கைகளைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஒரோவழி மறுத்துச் செல்லுதலும் ஒருவாறு புலனாயின. இவை கொண்டு, இப்பேராசிரியர் உரை இளம்பூரணர் உரையின் பிந்தியதெனவும், ஏனையோர் உரைகட்கு முந்தியதெனவும் ஒருவாறு துணிதற்கு இடமுண்டாயினும், ஏனையோர்உரைகளைச் சுட்டுமிடத்து, ஒரோவழி அவர்தம் பெயரையும் சுட்டி மறுத்தேகும் வழக்கமுடைய சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ஓரிடத்தானும், இப்பேராசிரியர் பெயரைச் சுட்டிமறுக்காமையானும், வேறு சில பொருட்டுக்களானும் அத்துணிபினை முடிந்த முடிபெனக் கொள்ளுதல் இதுபோது இயலாததாயிற்று.

இளம்பூரணர் முதலியோர் ஒருமித்துக் கொண்ட ஓத்துக்களில், இப்பேராசிரியர் பல விடங்களில் மாறுபடுவர். அவர்தாம் வேறுவேறாகக் கொண்டன சில ஓத்துக்களை இவர் ஒன்றாகக் கொள்வர். அவர்கள் ஒன்றாகக் கொண்டன சிலவற்றை இவர் தனித்தனியாகக் கொள்வர். ஒன்றின் ஓர் பகுதி ஏனையொன்றினொடு இணைந்து நிற்கும் வேறுபாடு, இவ்விருவகை உரைகளிற் சிலவிடங்களிற் காணப்பெறும். சில ஓத்துக்களின் முறையும் இவ்விருவகையினர் பாலும் வேறுபடும். ஓத்துக்களின் சொற்களினும், சொற்றொடர்களினும் பல்வகைய வேறுபாடுகள் உள. எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு கீழே காட்டப் பெறுகின்றன.

'ஒருபெயர்ப் பொதுச்சொ லுள்பொருளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.'

இளம்பூரணர் முதலியோர் உரை-கிள-சகூ.

'பெயரினும் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன.'

கிள. ருo.

'ஒரு பெயர்................தலைமையும் பன்மையும்.

பேராசி—கிள. சஎ.

'உயர்திணை மருங்கினும்................வழிப்பட்டன.

கிள-சஅ.

'செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய வென்ப;
அவற்றுள்
தருசொல் வருசொல் லாயிரு கிளவியும்
தன்மை முன்னிலை யாயி ரிடத்த;
ஏனை யிரண்டு மேனை யிடத்த.

இவற்றை இளம்பூரணர் முதலாய மூவரும் தனித்தனி மூன்று ஓத்துக்களாகக் கொண்டனர். பேராசிரியர் யாவையும் ஒன்றாகக் கொண்டனர்.

'உகப்பே யுயர்தல் உவப்பே உவகை.(உரியியல்)'

இங்ஙனம் இளம்பூரணர் முதலியோர் ஒன்றாக்கொண்ட இதனைப் பேராசிரியர் இரண்டாகக் கொண்டனர். 'அது வென்

வேற்றுமை' என்னும் ஓத்தும், 'ஆறன் மருங்கின்' என்னும் ஓத்தும் இவ்விருவகையாளர்கள் வெவ்வேறிடங்களில் வைத்துளார்கள்.

இனி, இவ்விருவகையினர் உரைவேறுபாடுகளும் காணுதற்கு வியப்பைத்தருவனவாகிப் பலவகையினவாகும். எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டு காட்டப் பெறுகின்றன.

விடை வகைகள். இளம்பூரணர், வினவெதிர் வினுதல், ஏவல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், உடன்படுதல் எனவாறும் என்பர். சேனவரையர் இவையாவும் செவ்வன் இறையும், இறைபயப்பதுமென இரண்டேயாமென்பர். நச்சினர்க்கினியர் இவ்விருவகையே மேற்கொண்டு, இவற்றுள் இறைபயப்பது—வினவெதிர் வினுதல், ஏவுதல், மறுத்தல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், உடன்படுதல், சொற்றெருகுத்திறுத்தல், சொல்லாதிறுத்தல் என எண்வகைத்து என்பர். பிந்திய நாலுரையாளர்களும் பெரிதும் மேற்கூறிய வகைகளையே தொடர்ந்து சொல்வாராயினர். பேராசிரியரோ பின்வருமாறு எழுதுகின்றனர்- அச்செப்பு நான்கு வகைப்படும். துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினவி விடுத்தல், வாளாதிருத்தல் என. துணிந்து கூறலாவது தோன்றியது கெடுமோ என்றவழிக் கெடும் என்றல். கூறிட்டுமொழிதலாவது செத்தவன்பிறப்பானே என்றவழிப் பற்றறத் துறந்தானே பிறனே என்றல். வினவிவிடுத்தல் என்பது முட்டைமூத்ததோ பனை மூத்ததோ என்றவழி, எம்முட்டைக்கு எப்பனை யென்றல். வாய்வாளாமையாவது ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு, உரையாடாமை. இங்ஙனமாய இவ்வுரையினைப் பார்த்தகாலை **மணிமேகலை**யின் வரிகள் நினைவிற்கு வருதலொடு, ஏதோவோர் நூலோடுசெல்லும் இவர்தம் உரையுயர்வுந்தோன்றுகின்றது.

வினவிடை நான்குள
துணிந்து சொல்லல் கூறிட்டு மொழிதல்
வினவி(ன்) விடுத்தல் வாய்வா ளாமையென;

தோன்றியது கெடுமோ கெடாதோ வென்றற்
கேடுண் டென்ற றுணிந்து சொல லாகும்;
செத்தான் பிறப்பா னோபிற வானோ
வென்று செப்பிற்
பற்றிறந் தானோ வன்மக னேவெனன்
மிகக்கூ றிட்டு மொழிதலென விளம்புவர்;
வினவின் விடுத்தன் முட்டைமுந் திற்றோ
பனைமுந் திற்றோ வெனக்கட் டுரைசெய்
யென்றெ லெம்முட்டைக் கெப்பனை யென்றல்;
வாய்வா ளாமை யாதா யப்பூப்
பழைதோ புதிதோ வென்று புகல்வா
னுக்கு மாற்ற முரையா திருத்தல். (மணி-கூ0-உகூடு.)

இனி இவ்வுரையாசிரியரின் நடைப்போக்கிற்கு எடுத்துக் காட்டுக்கள் ஒன்றிரண்டு வருமாறு:—

காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிருந் தோற்றுவதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம், புத்தி, ஆங்காரம்........... மாத்திரையாகி வினையினாற் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு; மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம் பொருள். வினை யென்பது ஊழ். பூதம் என்பது நிலம். சொல்லென்பது எழுத்தினான் இயன்ற பொருள் உணர்வது; அச்சொல்லினான் இயன்ற (மந்திரமும் ஆ)ம். விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. இந்நூல் செய்தான் வைதிக முனிவன் ஆதலின் சொல்லென்பது வேதம் என்று கொள்ளப்படும். (கிள-டுரு)

மன்னுப் பொருளும் அன்ன வியற்றே. (கிள-கூஉ)

இ-ள். பொருந்தும் பொருளும் பொருந்தாப்பொருளும் உறழ வேண்டுமிடத்தும் பொருந்தும் பொருள் கூறுமிடத்தும் உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும். எ-று.

வேதாகமத் துனிவு ஒருவர்க்கு உணர்த்து மிடத்து உலகும் உயிரும் பரமும் அநாதி, பதியும் பசுவும் பாசமும் அநாதி எனவரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந் தும் பொருள் ஆனவாறும், பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாப் பொருளானவாறும் காண்க.

பன்னிரு நிலமாவன:—வையையாற்றின்.........நாடு, ஒளி நாடு, தென் பாண்டிநாடு, கருங்குட்டநாடு, குட நாடு, பன்றி நாடு, கற்காநாடு, சீதை நாடு, பூழி நாடு, மலாடு, அருவா நாடு, அருவா வடதலை என்ப. இவை செந்தமிழ்நாட்டகத்த செந்தமிழ் * நாடென்றமையால், பிறநாடாகல் வேண்டுமென் பார் உதாரணங் காட்டுமாறு:—‡ 'கன்னித் தென்கரைக் கடற் பழந்தீபம் கொல்லங் கூபகஞ் சிங்கள மென்னும் எல்லையின் புறத்தவும் கன்னடம் வடுகம் கலிங்கம் தெலிங்கம் கொங்கணம் துளுவம் குடகம் குன்றகம் என்பன குடபா லிருபுறச் சையத் துடனுறைபு கூறுந், தமிழ்திரி நிலங்களும் முடியுடை மூவரிடு நிலவாட்சியின் அரசு மேம்பட்ட குறுநிலக் குடிமிகள். பதின் மருடனிருப் பிருவருமாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிரு தேயத்தினும், தமிழ்ச் சொல்லாதற்கு விருப் புடையன என்றமையானும் "தமிழ் கூறு நல்லுலகத்து, வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின், எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி" என நிறுத்துப் பின்னுஞ் "செந்தமிழியற் கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு" என ஓதிய வதனாற் சிவணிய நிலமாவது எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுதலானும், பன்னிரு நிலமாவன:—குமரி யாற் றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும், கொல்லமும், கூபகமும் சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமுந் துளுவ முங் குடகமுங் குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும் வடுகும் தெலிங்கும் கலிங்கமும் என்று கொள்ளப்படும்.

(தொடரும்)

இதழாசிரியர்.

*'சேர்ந்த' விடுபட்டுளது போலும். ‡ மயிலைநாதர்-கசுக பக்கத் து சில பாடவேறுபாடுடன் உள்ளஇது அகத்தியம் எனக்காணப்படும்.

தமிழ் எழுத்துக்கள்.

'எழுத்தெனப் படுப,
அகரமுதல்
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.'
'அவைதாம்,
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.'

என்னும் தொல்காப்பிய நூன்மரபுச் சூத்திரங்கள் தமிழெழுத்துக்கள் இவை யெனவும், இத்துணைய வெனவும் உணர்த்துகின்றன. 'எழுத்தெனப்படுப' என்னும் இத் தலைச்சூத்திரத்தானும், இவ்வியலிற் பின்வரும் பல சூத்திரங்களானும் தமிழெழுத்துக்களின் முறை நெடுங்கணக்கில் வழங்கிவரும் முறையே யாமென்பது அறியப்படும். அது விரிவஞ்சி விளக்காது விடப்படுகின்றது. அகரம் முதல் ஔகாரம் இறுதியாகவுள்ள பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ககரம் முதல் னகரம் இறுதியாகவுள்ள பதினெட்டு மெய்யெழுத்துக்களும், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பெழுத்துக்களும் தமிழெழுத்துக்களாமென்க. எழுத்துக்களை உருவெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மையெழுத்து என்றும், பிறவாறும் பகுத்துக்கொண்டு இலக்கணங் கூறுவாருமுளர். இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் 'தன்மையும் வடிவும் நமக் குணர்த்தலருமையின் ஆசிரியர் கூறிற்றிலர்' என இங்ஙனமுரைப்பது தன்மையெழுத்தெனலோர் பிரிவு கொள்ளுதலும் உண்டென்பதற்குப் பழஞ்சான்றாகும். வெளிப்படையாகவுள்ள ஒலியெழுத்து, வடிவெழுத்து என்பனவே இங்கு ஆராய்ச்சிக்குரியன.

எழுத்து என்னும் பெயரின் காரணம். சுவாமிநாத தேசிகர் தமது இலக்கணக் கொத்துரையில் எழுத்தென்னும் பெயர் பற்றி யெழுதுவது பின்வருமாறு:—"எழுத்தென்னுந் தொழிற் பெயர் அப்பொருளை விட்டுப் பால்பகாவஃறிணைப் பொருட் பொதுப் பெயராய், அப்பொருளைவிட்டு ஒலிய முதலியன போலன்றி அகரம் னகரம் முதலியன வடிவை யுணர்த்துஞ் சிறப்புப் பெயராய், அப்பொருளைவிட்டு ஒலியை யுணர்த்தும் ஆகுபெயராய், அப்பொருளைவிட்டு அவ்வொலியின திலக்கணத்தை யுணர்த்தும் இருமடியாகுபெயராய், அப்பொருளைவிட்டு அவ்விலக்கணத்தை யுணர்த்தும் நூலினை யுணர்த்தும் மும்மடியாகு பெயராய், அப்பொருளைவிட்டு இங்ஙனங் கூறிற்றெழுத்து இங்ஙனம் மறிவித்ததெழுத்து எனக் கருமகருத்தாவையும் கருவிக் கருத்தாவையும் உணர்த்தும் நான்மடி யாகுபெயராய் நின்று பலபொருள் பட்டது க்காண்க."

இதனானே, எழுத்தென்னுஞ்சொல் தொழிற் பெயரென்பதும், அது முதற்கண் எழுதலுறும் வடிவை யுணர்த்திப் பின்பு ஒலியை யுணர்த்தலுற்ற தென்பதும் அவர் கருத்தாதல் பெறப்படும். யாப்பருங்கல விருத்தி மேற்கோட் சூத்திரமொன்று 'எழுதப்படுதலி னெழுத்தே' என்று கூறுவதும், நன்னூல் உரைக்கண் 'எழுதப்படுதலின் எழுத்தெனக் கொள்க' என்று மயிலைநாதர் கூறுவதும் எழுத்தென்பது எழுது என்னும் பகுதியடியாகப் பிறந்த செயப்படு பொருட்பெயர் என்னும் கருத்துடையனவாம். சிவஞான முனிவர் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் எழுதப்படுவதென்னும் பொருட்கண் எழுதென்னு முதனிலை யுரிச்சொல்லின் முன்னர்ச் செயப்படு பொருண்மை யுணர்த்தும் ஐகாரவிகுதி புணர்ந்து.........அவ்வைகாரங் கெட்டுக் கெட்டவழித் தகரமிரட்டித்து எழுத்தென் முடிந்தது' என்று கூறுவது அதனைத் தெளிவாக்குகிறது. மற்றும் அவர், 'இவ்வாறன்றி எழுதென்னு முதனிலை எழுத்தெனத்தானே திரிந்து நின்றதென்றும், அஃதாகு பெயராற் செயப்படு பொருளை யுணர்த்திற்றென்றுங் கூறுவாருமுளர்; அது பொருந்

தாது, என்றுரைப்பது சுவாமிநாத தேசிகர் கூற்றை மறுப்பது போன்றுளது. எனினும், இவரனைவரும் எழுத்தென்பதற்கு எழுது என்பதே முதனிலையெனக் கொண்டனர். இன்னோர் கருத்தின்படி எழுத்தென்பது எழுதப்படும் வடிவையே முதற் கட் குறித்ததாகும். அங்ஙனமாயின், ஒலியை யுணர்ந்து கோடற்குக் கருவியாகவே வடிவு வேண்டப்பட்டதென்பது எல்லார்க்கும் உடம்பாடாகலின் வடிவாகிய எழுத்துண்டாதற்கு முன்பு ஒலியைக் குறிப்பதொரு பெயர் இருந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியத்து யாண்டும் எழுத்தென்னும் பெயரே பயின்று வந்துளது. 'ஓரள பிசைக்குங் குற்றெழுத்து' 'ஈரள பிசைக்கு நெட்டெழுத்து' என்றாற்போல வருவன பலவும் ஒலியையே சிறப்பாகக் குறித்தலும், வடிவினைச் சிறப்பாகக் குறிக்கலுறும் 'உட்பெறு புள்ளி யுருவா கும்மே' 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' என்றற் றொடக்கத்துச் சூத்திரங்களில் எழுத்தென்னும் பெயர் காணப்படாமையும் சிந்திக்கற்பாலன.

இவ்வாற்றால் எழுத்தென்னும் பெயர் மொழிக் கருவியாம் ஒலியைக் குறிப்ப தொன்றாகவே தொல்காப்பியனர் கொண்டுளாரெனக் கருதுதல் பொருத்த முடைத்தெனத் தோன்றுகிறது. தொல்காப்பிய உரைகாரர் யாரும் இப்பெயர்ப் பொருளை விளக்கிற்றிலராயினும் 'இவ்வெழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பார் அறியாதார்; அதனை உருவென்றே கோடும்' என நச்சினார்க்கினியர் கூறுவது ஒருவாறு இக்கருத்திற்குச் சார்பாகவுளது. இனி, ஆசிரியர் 'எல்லா வெழுத்தும்' என்னும் பிறப்பியற் சூத்திரத்து எழுத்தொலிகளின் நிலைவேறுபாடுகளை யுணர்த்துங்கால் 'எழுதரு வளியில்' எனவும், 'அகத்தெழு வளியிசை' எனவும், 'எழுந்துபுறத் திசைக்கும் மெய்தெரி வளியிசை' எனவும் வளியிசையின் எழுச்சியை அவற்றுக்குக் காரணமாகக் கோடலின் எழு என்னும் பகுதியினின்று எழுத்தென்னும் பெயர் தோன்றிற்றாகக் கொள்வது பொருத்த முடைத்தெனத் தோன்றுகிறது. அது பின்பு அவ்வெழுத்தினை யுணர்தற்குக்கருவியாக வேண்டப்பட்ட வடிவினையும் குறித்ததாதல் வேண்டும்.

உயிர் முதலிய பெயர்க் காரணம் இனி, அகர முதலிய பன்னிரண்டுக்கும் உயிர் என்றும், ககர முதலிய பதினெட்டுக்கும் மெய் என்றும் குறியிட்டிருப்பது பண்டைத் தமிழரின் உண்மை நூலுணர்வுக்குத் தக்க சான்றாகும். நன்னூல் உரையில், மயிலைநாதர் 'ஆவி, உயிர், மெய், உடம்பு என்பன இடுகுறிப் பொதுப்பெயர்' என்று கூறியது பொருத்தமில் கூற்றாம். 'உம் முதலீராறாவி' என்னும் நன்னூற் சூத்திரவுரைக்கண் 'ஆவியும் மெய்யும் போறலின் இவ்விருவகை யெழுத்திற்கும் ஆவி மெய்யென்பன உவமவாகு பெயராய்க் காரணப் பொதுப் பெயராயின' என்று சங்கர நமச்சிவாயப்புலவர் கூறுவதும், 'ஔகார விறுவாய்ப், பன்னீ ரெழுத்து முயிரென மொழிப' என்னுந் தொல்காப்பியச் சூத்திர வுரைக்கண் 'இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கியதோர் குறி; மெய்பதினெட்டினையும் இயக்கித்தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று' என்றும், 'னகார விறுவாய்ப், பதினெண்ணெழுத்து மெய்யென மொழிப' என்னுஞ் சூத்திரவுரைக்கண் 'இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. என்னை, பன்னிருயிர்க்குந் தான் இடங்கொடுத்து அவற்றான் இயங்குந்தன்மைபெற்ற உடம்பாய் நிற்றலின்' என்றும் நச்சினார்க்கினியர் உரைப்பனவும், உயிர் மெய்யென்பவற்றின் பொருளை விளக்குவனவாம். குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பன இகர உகரங்களின் குறுக்கமாயினும் அவை முன் ஒரு மாத்திரையாய் நின்று பின் அரை மாத்திரையாய்க் குறுகின எனற்கிடனின்றி, இடமும் பற்றுக்கோடுஞ்சார்ந்து இயற்கையாய் அரைமாத்திரை பெற்று நிற்றலானும் அப்பெயர்க் குரியவாயின. ஆய்தம் என்பதன் பெயர்க் காரணத்தைப் பழைய உரையாளர் யாரும் உள்ளவாறு புலப்படுத்திலர். 'ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப்போல மூன்று புள்ளிவடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற் புள்ளியுமென்றார்' எனத் தொல்காப்பிய வுரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கின்றனர். ஈண்டு முப்புள்ளியெனக் கூறின் அவ்வடிவு ... இங்ஙனமோ, அன்றி ∴ உங்ஙனமோ, வேறெங்ஙனமோ எழுதப்படும் என ஐயம் நிகழுமாகலின், அது

நிகழாமைப் பொருட்டு 'முப்பாற்புள்ளி' என் ஆசிரியர் கூறி வைத்தனர். நச்சினார்க்கினியர் 'அடுப்புக் கூட்டுப்போல' என உவமங்காட்டி அதனை விளக்கினர். ஆய்தமென்னும் பெயர்க்கு அவர் காரணங் கூறிற்றிலர். பிற்காலத்தே நன்னூற்கு உரையெழுதப் புகுந்தார் சிலர் நச்சினார்க்கினியரின் கருத்தினையறிய மாட்டாராய் அதனைத் திரித்துக்கொண்டு, 'அடுப்புக் கூட்டுப்போல இருவகை ஆயுத வடிவாக மூன்று புள்ளி வைத்து எழுதப்படுதலால் ஆய்தமென்று பெயர். ஆய்தம்—ஆயுதம்; இங்கே போர்க்கருவியாகிய கேடகமென்னும் படையும், சமைத்தற் கருவியாகிய அடுப்பும்' என்று தம்மனம் போனவாறு கூறுவாராயினர். இங்ஙனம் ஒரு நெறிப்பாடுமின்றித், தனித்தமிழ்ச் சொல்லாகிய ஆய்தம் என்பதனைப் புழைக்கவும் பொதுமை புணர்த்தும் ஆயுதம் என்னும் வடசொல்லெனக் கொண்டு நவின்று பொருள் கூறுவது ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் சிறிதும் ஒத்ததன்று. ஆயின், ஆய்தமென்பதன் பொருள்தான் யாதோ எனின், ஆய்தல் என்பது நுணுகுதல் என்னும் பொருட்டாகலின் நுணுகிய ஓசையுடையது என்பது பொருளாதல் வேண்டும். ஆய்தல் அப்பொருட்டாதலை

'ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'

என்னும் உரியியற் சூத்திரத்தா னறிக.

(தொடரும்)

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

ஸ்ரீ

சோமேசர் வெண்பா உரைக் குறிப்பு.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் அருளிய திருக்குறளின் ஒவ்வோரதிகாரத்தில் ஒவ்வொரு குறளைப் பிற்பகுதியாகவும், அவ்வக்குறட் கேற்ற ஒவ்வொரு கதையை முற்பகுதியாகவும் கொண்டு சிவஞானசுவாமிகளால் இயற்றப்பட்டுள்ள இந்நூலில்

> "பல்லவர்கோன் வந்து பணியக் கருணைசெய்தார்
> தொல்லைநெறி வாகீசர் சோமேசா—கொல்ல
> இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
> புணரின் வெகுளாமை நன்று."

என்னுமிச் செய்யுள் "வெகுளாமை" என்னுமதிகாரத்து ஓர் குறளையும், அதற்கேற்றதொரு கதையினையுங் கொண்டு வந்த தாகும்.

இதற்குத் திருவாளர், வா. மகாதேவ முதலியாரவர்கள் கூறிய உரைவருமாறு:—

சோமேசா—! கொல்ல—கொல்லக்கருதி, இணர் எரி தோய்வு அன்ன—பலசுடரை உடைத்தான பேரெரி வந்து தோய்ந்தாற் போன்ற, இன்னா செயினும்—துன்பங்களை ஒருவன் செய்தானா யினும், **வெகுளாமை—(அவனை) வெகுளாமை, புணரில்—(ஒருவனுக்குக்) கூடுமாயின்,** நன்று (அது) நன்று,— (அதற்கு எடுத்துக்காட்டு)—தொல்லைநெறி வாகீசர்—பழைமையான வழியிற் சென்ற திருநாவுக்கரசுநாயனர், பல்லவர் கோன்வந்து பணிய—பல்லவராசன் வந்து வணங்க, கருணை செய்தார்—திருவருள் பாலித்தார் என்பதாம்.

இதன்கட் குறட்பகுதியில் "புணரின்" என்னும் வினையை வெகுளாமைக் கேற்றி "வெகுளாமை புணரின்" எனமாற்றி உரை கூறப்பட்டுள்ளது.

அங்ஙனம் மாற்றியுரைத்ததனால் ஒருவன் தன்னாற் பொறுத்தற்கரிய துன்பங்கள் பலவற்றைச் செயின், செய்யுங்கால் அவனை வெகுளாமை தனக்கு எய்துமாயின் நன்று என்னுங் கருத்துப்புலனாகின்றது. இக்குறட்குப் பரிமேலழகர் கூறிய உரையும் இதுவே. ஆயினும், இவ் வெண்பாவின்கண் இக் குறட்கமைந்துள்ள எடுத்துக்காட்டு, திருநாவுக்கரசுநாயனார் முதலிற் றமக்குப் பற்பல பெருந்துன்பங்களிழைத்த பல்லவன், பின்னர், தம்மை வந்தடைந்த ஞான்று அவனை வெகுளாது அருள்புரிந்தார் எனத் துன்பமிழைத்தானை இழைக்குங்கால் வெகுளாமைக்கு எடுத்துக்காட்டாகாது, அவன் மீண்டுந்தன்னை வந்தடையுங்கால் வெகுளாமைக்கு எடுத்துக் காட்டாகவுள்ளது.

அதனால், ஈண்டுக்கூறிய உரையின்படி இச்செய்யுள் முன்னொடு பின் முரணாகின்றது.

இனி இச்செய்யுள் அமையுமாறென்னையெனின் எடுத்துக் காட்டுக்கேற்பப் பொருள்கொள்ளவே யமையும்.

ஒருவன் தன்னை மிகத்துன்புறுத்தியவழி அதனைப் பொறுத்து அவனை வெகுளாதிருத்தல் ஒருவனுக்கெய்துதல் அரிதென்னுஞ்சீரிய கருத்துத் தோன்றப், பரிமேலழகர் “**வெகுளாமை புணரின்**” என மாற்றிக்கொண்டு உரை கூறியிருப்பினும், சிவஞானசுவாமிகள் அதன்கட் பின்னுமோர் நயங்கண்டு தன்னைத்துன்புறுத்தியவன் மீண்டுந்தனது பயன் கருதியோ, பிறவாற்றானோ **தன்னைவந்தடைவானாயின்** அவனை வெகுளாது, அவனுக்கு ஆவனசெய்து தழீஇக்கோடல் வேண்டும் என்னும் உயரிய கருத்தை அக்குறட்குப் பொருளாகக்கொண்டு அதற்கேற்பத் தனக்கு நஞ்சூட்டல் முதலிய பற்பல பெருந்துன்பங்களிழைத்த பல்லவன் மீண்டுந் தன்னைவந்தடைந்தவழி அவனை வெகுளாது தன்னருட்குரியனாக்கிக் கொண்ட கதைப் பகுதியை மேற்கோளாகக் கொண்டனரெனக்கோடல் பொருந்தும்.

அங்ஙனங் கொள்ளுங்கால் "**புணரின்**" என்பதனை வெகுளாமைக்கேற்றி மாற்றாது உள்ளவாறே வைத்து, இணரெரி தோய்வன்ன இன்னா செய்தான், புணரின்—மீண்டுந் தன்னை வந்தடையின், வெகுளாமை—அவனை வெகுளாமை, நன்று—எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

இங்ஙனமே சங்கரநமச்சிவாயப்புலவர் நன்னூல் விருத்தியின்கண் "பெயர்வினை யும்மை சொல்" என்னும் ௯-ஆம் சூத்திர உரையில் "இணரெரி......நன்று" என்புழிப் பிற உயிர்க்கு இன்னாசெயின் அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டன்பும், பிறவுயிர்கண்மாட்டருளும், இன்னா செய்தலான் மேன் மேல் வளரும் பிறப்பிறப்பி னச்சமும், நம்மாலின்னா செய்யப்பட்டாரை நாமடைக்கிரத்தல் கூடினும் கூடும், அதனால் யாவர்மாட்டும் இன்னா செயக்கடவமல்லம் என்னும் வருங்கால உணர்ச்சியுமிலராய், ஒருவர் தன்னாலாற்றல் கூடாத இன்னாதனவற்றைத் தன்கட் செய்தாராயினும், அவர் தமக்கு வேண்டுவதோர் குறைமுடித்தல் கருதி, நாணாது தன்னையடைந்தாராயின் அவர்செய்த இன்னாமை கருதி அவரைவெகுளாது அவற்றைமறந்து அவர் வேண்டுங்குறைமுடித்து முன்செய்த இன்னாமையால் அவர்கூசி ஒழுகுதல் தவிர்தற்குக் காரணமாகியமெய்ப்பாடு முதலியன தன்கட் குறிப்பின்றி நிகழ, அவர்க்கினியனாகியிருத்தல் தன்சால்பிற்கு நன்று" என உரைத்திருப்பதும் கண்டு நோக்கத்தக்கதாகும்.

நன்னூல்விருத்தியுரை சிவஞான முனிவரால் திருத்தப்பட்டதெனக் கூறப்படுதலை நோக்க, இப்பகுதி அவராலேயே எழுதப்பட்டிருக்கலாமென எண்ணவுமிடந்தருகின்றது.

ஆ. பூவராகம் பிள்ளை.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள் இறந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளி
தாட்டா மரைநீர் மடுவின்கட் தனிமாமுதலை வாய்நின்று [யூர்த்
மீட்டார் கழலே நினைவாரை மீளா வழியின் மீட்பனவே.

சிவவேடத்தையே சிவமாகக் கொண்டவர் மெய்ப்பொருள் நாயனார்.

பெரியபுராணம்.

உலகம் போற்றும் அலகில் சீர்த்தி, நிலமகள் நெற்றித் திலகமாய் விளங்கும், பாடல் சான்ற பீடுயர் தென்னாடு, அமிழ் துற்ழ் சுவைமிகு தமிழ்நா டதன்கண், தேவரும் மறையும் இன்னுங் காணாச், செஞ்சடை யுடைய அஞ்சொலாள் பாகன், தன்னைப் பாடிய **நாவுக்கரசும், நம்பியாரூரும்** பிறக்க நற்றவஞ் செய்த நடுநாடாகிய **சேதிநாட்டின்கண்** ஔவை பாடலுக்கு நறுநெய் பால் பெருகியதும், தமிழறிவுடையதும் ஆகிய பெண்ணையாற்றை நீரரணாகக் கொண்டு அதன் தென்மருங் கிருந்தது: திருக்கோவலூர். தென்றல்வீச, வண்டுகள் பாடும் கொன்றை, காயா, குருந்தம், மஞ்சாடி, கோங்கு, புன்னை, குரவு, பிடவம், வேரல், நரந்தம், நாகம்—இனைய மரங்களை யுடைய காப்புடையுடையது. எழிசையும், ஆறுறுப்பும், நான் மறையும் உணர்ந்து, ஐம்புலத்து ஆறு ஓம்பி, முத்தி விரும்பி இருபொழுதும் ஒன்றும் அடியவர்க்கு ஆர்தற்கெளிய அமிழ்த மாகிய அரி, அரன் கோவில்களைத் தன்னகத்துடையது. மறை வளரப் புகழ்வளரும் மாடங்களையுடையது. அலர்மகளும்,

கலைமகளும், கலையூருஞ் செறுமகளும் திகழப்பெறுவது. பொய்யில் புலவராற் பாடப்பெற்றது. இத் திருத்தகுபதியில் செம்பொருட்பால் நிறையன்புடையார் மருமானார்; சைவத்தண்ணெறிநின்ற தாவில் வாழ்க்கையர்; மன்றவர் அன்பரின் தொண்டர்; மலாடர்க் (மலையமானாடர்க்) கரையர்; தன்னாலும், தன்சுற்றத்தாராலும், கள்ளராலும், பகைப்புலத்தாராலும், விலங்காலும் உயிர்கட்குக் குற்றம்வராது நீக்குவதோடு தெய்வம் முதலானவற்றாலும் வரக்கடவ துன்பங்களையும் முன்னரே யறிந்து நீக்கி, ஆறிலொருகடமைகொண்டு, அளித்து, உண்டு, "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்" என்பதற் கிலக்காய், மங்கை பங்கர் தங்குங் கோயில் எங்கும் பொங்கொளி விளக்கும், பூசையும், பாடலும், ஆடலும் தவறாது நடத்துவித்தலில் கண்ணும் கருத்தும் உடையவர்; சிவனடியாரை அழைத்துவந்து உவந்து, அறுசுவையோடுகூடிய நால்வகையுணவும் அன்பொடு விராய் ஊட்டும் "மண்ணினிற் பிறந்தார் பெறும்" பயனுடையார்; மறைவழியொழுகும் உயர்திருவாளர் **மெய்ப்பொருள் நாயனார்** ஆவர்.

இப்பெரியாருடன் அரசியல் முறையிற் பலமுறை பொருது ஆற்றாது முதுகும், உளமும் புண்பட்டு ஓடிய **முத்திநாதன்** என்னும்—குங்குமஞ் சுமக்குங் கழுதை—ஒருவன் உளன். இவன், நமது திருநெறிப் பெரியாரை எவ்வாற்றானும் நிலவுலகின் நீக்கல்வேண்டும் என்னும் எண்ணம் உடையனாய், தன்வஞ்ச மனத்தின் பொய்ம்மையொழுக்கத்தைப் பூதங்கள் அஞ்சும் நகும்படியாகப் புலி பசுத்தோலைப் போர்த்தாற்போலப் பொய்யுடலில் மெய்ந்நீறு பூசிக், கண்டிகை பூண்டு, சிவவேடத்தை மேற்கொண்டு, சுருள்வாட்படையினை உள்வைத்துப் புத்தக மூட்டைபோலக் கட்டிய கவளியுடையனாய்த் திருக்கோவலூரை யடைந்து அரன்மனைவாயிலை அண்மினன். அவனைக்கண்ட வாயிற்காவலர் சிவனடியார் அழைக்காமலும் தாமே வந்தார் என்னும் விருப்புடன் தொழுது புகவிட்டனர். கயவனும் காவல்கடந்து வரும் நிலையில், இறுதியில் தனிக்காவலனாய் நின்ற **தத்தன்** என்னும்

அறிவாளன் முத்திநாதனை நோக்கி, ஐய! இப்போழ்து அரசர் பெருமானார் துயில் கொளும் அமயம் ஆகலின் காலமறிதல் வேண்டும்; அன்றியும் இடமும் அறிந்து செல்லல் வேண்டும் என்று கூறினன். யான் அவற்கு மெய்யறிவுறுத்தச் செல்லு கின்றேன். நீ தடுத்தல் ஒண்ணாது என்றுரைத்து, விரைந்து உள் புக்குப் 'பட்டத்துப் பெருந்தேவி மாடே இருக்கக்' கட்டிற்கண் துயிலும் அரசனைக் கண்டும் அண்மினன் அமளியை. அதனை அறிந்த அரசி விரையஎழுந்து அரையரைத் துயிலுணர்த்தினாள். உடன் எழுந்த அரசர் அண்டர் நாயகரின் தொண்டர் வேட முடையவர் என்று உவகை கொண்டனராய், குவித்தகையுடன் முறைப்படி வணங்கினார். இப்பெரியாரின் சீரிய குணங்களுள் சிவ்வேடத்தைச் சிவமாக நினைத்தல் என்னும் பண்பு முதன்மை யானது என்பதனைச் சேக்கிழார், "திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்" என்றும், "தங்கள் நாய கருக் கன்பர் தாளலாற் சார்போன் றில்லார்" என்றும், "மெய்த் தவ வேடமே மெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்' (பெரிய-மெய்ப் 2-3-15) என்றும் பாராட்டிக் கூறியுள்ளார்கள். வணங்கிய அடியவர் மங்கலம் நிறைதவ! இங்கெழுந்தருளப் பெற்றதற்குக் காரணம் என்னையோ? என்றனர். சிவபெருமான் அருளிய எங்குமில்லாத ஆகமத்தை உனக்கு உணர்த்த ஈண்டுப் போந்தேன் என்று சொல்லக் கருதிய கயவன், இருள் நிறைந்த உள்ளத்து வேறோர் எண்ணமுடையவன் ஆதலினால் 'தன்மாட்டுக் கடவுளிடத்து அன்பில்லாதவன் என்பது போதர "உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல், எங்குமில் லாதது ஒன்று கொடுவந்தேன் இயம்ப" (பெரி-மெய்) என்று சொற்றான். அது கேட்ட நாயனார் இப்பேறுடையார் என்னை யன்றி உலகத்து வேறு யாவர் உளர்? நாயகனது ஆகமத்தை உணர்த்தியருளல் வேண்டும் என்றார். அவ்வாறாயின் நீயும் நானுமே இருத்தல்வேண்டும் என்று கூறியதும், பிடியுறழ் நடை யாரை அந்தப்புரத்திற்கு அனுப்பித் தான் கீழிருந்து கைதவனை உயர்ந்த ஆதனத்திருத்தி அருளிச் செய்யும்படி வேண்டினார்.

கொலையஞ்சாக் கொடியனும் முன்னம் ஒளித்து வைத்திருந்த வாளைப் புத்தகம் அவிழ்ப்பான் போல எடுத்து ஓச்சி, அடியவரின் கழுத்திற் பூட்டினன். அந்நிலையிலும் அக்கொடியனைக் குரவனுக உளத்துக் குறித்தே கைகளைக் கூப்பிக் கும்பிட்டார். இந்நிகழ்ச்சியைத் தொண்டர்சீர் பரவும் தண்டமிழ்த் திருநெறிக் கொண்டல் 'கொன்றான்' என அமங்கலச்சொல் கூறுதல் கூடாதென்றும், கீழ்மகன் கொன்று வென்றானாயினும் எழுலகமுள்ளளவும் நிற்கும் பழியையுடைமையால் தோற்றான் என்றும், அடியவர் இறைவனடியை யடைந்து இன்புறும் பேரரசுடைமையுடன் தவவேடமே உண்மைப்பொருள் என்று உலகியலை வென்றனர் என்றும் பொருள்படும்படியாக,

" கைத்தலத்து இருந்த வஞ்சக் கவளிகை 'மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேடமேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்"
(பெரிய-மெய்-15)

என்று வனப்பு முதிரக் கூறியுள்ள செய்யுள் தமிழ்ச் சைவநன்மக்களின்—தீயன வழுக்கியும்வாயாற் சொல்லாத உயரிய ஒழுக்கத்தினைக் காட்டுகின்றதனை உணரார் யாவர்? சேக்கிழார் பெருமான் இவ்வாறு கூறியதனைப் புகழ்ந்து வாழுட்சி புரியும் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய பிள்ளைத் தமிழில் 'அமங்கலமாம் சோற்கள் புணராது' பாடியருளவல்லவர் என்று பாராட்டிக் கூறியுள்ளார். மெய்ப்பொருள் நாயனர் வென்றார்; கயவன் தோற்றான் என்று பொருள்பயக்குமாறு "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்" என்று வன்றொண்டரும் கூறியுள்ளார். புதன்மறைந்து புட்பிடிக்கும் வேடன்போலத் தவமறைந்து தீங்கு செய்வோன் உட்புகுந்தது முதல் அரசனிடத் துவைத்த உளத்தை யுடைய தத்தன் விரைந்து தாவிஉட்புகுந்து கொடியனைக் கொல்ல வாளோச்சினன் "நாயனர் தத்தா, நம்மவர்; அவருக்குத் தீங்குசெய்யாதே" என்று கையாற்றடுத்

து சோர்கின்ற உதிரத்துடன் கீழ்வீழ்ந்தார். தத்தன் மிகப் பதைபதைப்புடன் அரையரை வணங்கித் தாங்கினவனுய், "ஐயோ! யான் யாது செய்வேன்" என்று அழிந்தான். வள்ளலார் "இச்சிவனடியார்க்கு எத்தீங்கும் வாராமல் வழிவிட்டு வருவாயாக" என்று கட்டளையிட்டார். இதனை யுணர்ந்தோரெல்லாம் இப்பொய்ப்பொருளைக்கொல்வோம் என்று சூழ்ந்தனர். தத்தன் அரசன் ஆணையைத் தலையிலும், வாளைக் கையிலும் கொண்டு வழிமறித்தோர்க்கு அரசராணையைக் கூறி விலக்கிச் சேணிடைவிட்டு மீண்டு அடைந்தான். தத்தன் 'பொய்த்தவனைத் தீங்கின்றி விட்டேன்' என்று சொல்லும் உரையைக் கேட்டல் வேண்டித் தாங்கொணுச்சுமையைச் சுமப்பார்போற் போகின்ற உயிரைப் பேணுகின்ற பெரியார், விட்டுவந்த நிகழ்ச்சியைக்கேட்டு இவ்வையன் இற்றைக்கண் காலத்தாற் செய்த நன்றிக்கு யான் யாது கைம்மாறு செய்யும் கடப்பாடுடையேன் என்று கூறியருளி

"அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியினுலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீ ரென்று
புரவலன் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்"

(பெரி-மெய்-12.)

அரசியற் றுறையில் அமைந்த அமைச்சர் முதலாகிய கூட்டத்தார்களையும், வருந்துகின்ற மக்கள் முதலானவரையும் விளித்து எப்பொழுதுந் திருநீற்றிடத்து அன்பு கொள்வீர்களாக என்று கூறித் திருச்சிற்றம்பலம் உடையாரைச் சிந்தையில் உன்னினர். இறைவனர் பருப்பதன் புதல்வியோடு காட்சி தந்து வீடுபேற்றை அளித்தருளினர்.

குறிப்பு.

இச்சரிதத்தான் இலாடத்திட்ட நீற்றையும், கண்டிகையையும் உடையவர் எவரேனும் அவரைச் சிவனடியார் என்றே போற்றி வணங்குதல் வேண்டும் என்பது நாட்டப்பட்டதாகும். என்னை? "மாலறநேயம் மலிந்தவர் வேடமும்- ஆலயந் தானும்

அரனெனத் தொழுமே" என்னும் மெய்ப்பொருள் கண்டார் திருமொழிக் கிணங்க அவர்களுடைய குணங்களைக் குறிக்காது வேடத்தை வணங்குக என்பது வலியுறுத்தப் படுதலான் என்க.

"திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்" என்பதனுள் 'வேடமே' என்ற மொழியின் பிரிநிலை ஏகாரத்தானும் சேக்கிழார்க்கும் இதுவே கருத்தாமாறு அறிக.

"சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்"

என்பதனால் **திருக்கோவலூர்** சேதிநாட்டைச் சேர்ந்தது என்பது விளங்குகின்றது. மலையமானாடு சேதிநாட்டின் ஒரு பகுதியோ என ஐய ஆராய்ச்சியும் பிறக்கின்றது. இப்பெருமான் மலையமான் திருமுடிக்காரியின் வழியினர் எனவும் ஊகிக்க இடம் தருகின்றது.

தத்தனது திறமையை அழகுறக் கூறுதலால், அரசரிடத் தமரும் காவலாளர்க்கு வன்மையும், கூரிய நுண்மையும், அரசர் ஆணைவழிக்கண் கடவாது நிற்றலும், வேண்டுமெனல் பெறப்படுகின்றது.

"மாதேவி இருப்பக் **கண்டான்**" என்று கூறிப் பின்னும் "**கண்டுசென் றணையும்** போது" என்று வலியுறுத்திக் கூறுதலான், தம்பதிகள் தனித்திருக்குமிடத்துப் பிறர் புகுவது தமிழர்க்கு நபத்தக்க நாகரிகம் அன்று என்பது அடைகின்றது.

எங்கள் தலைவன் அல்லன் என்பது புலப்படுமாறு "உங்கள் தலைவன்" என்று முத்திநாதன் பெரியாரை நோக்கி நவலும் கூற்றுகக் குறித்தலால், உளத்துள்ளதை மறைத்துக் கூறினும், மறைக்க முயன்றது மறைபடாது வாய்வழிவரும் என்னும் உளநூல் நயம் தெரிந்தன்று.

"மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்" என்று குறித்துள்ளமையின், மெய்ப்பொருள் நாயனர் திருத்தில்லையிலெழுந்தருளி ஆடும் கூத்தரிடத்து மிகவும் பற்றுடையார் என்பது தோன்றுகின்றது.

"தவவேடத்தானைத் தவிசின்மேலிருத்தித் தாமும் இரு நிலத்திருந்து" என்பதனல் ஆசிரியரிடத்து மாணக்கன் முற்காலத்து நூல் கேட்கும் முறைமை அறியப்படுகின்றது. "அரசியல் ஆயத்தார்" என்று குறித்துள்ளமையால் எண்பெருங்குழு, ஐம்பேராயம் முதலிய அவைகளையுடையது இவ்வரசரின் இணையில்லா அரசாட்சி என்பது நன்கு தெரிகின்றது.

மேய்ப்பொருள் நாயனர் சரிதம் திருக்கோவலூர்ப் புராணத்தும் கூறப்பட்டுள்ளது. அதன்கண் நூலாசிரியர் மெய்ப்பொருள் நாயனரை மலையமான் உடையார் வகையினர் என்று குறித்துள்ளார்.

திரு. மு. வே. மா. உலக ஊழியன்,
தமிழ்ச்சங்கம், கோடாக்கரந்தை.

உ
குகமயம்.

திருவாளர்.

குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனு நான்கெல்லையி னிருந்தமிழ் நிலத்திலே, பண்டுதொட்டின்றுகாறும் நம் தமிழ்ப் பெருமக்களுள், ஒருவர் மற்றோர் உயரியார்க்குத் திருமுகம் வரையுமிடத்துப் பெருமை கருதி மஹாராஜ ராஜஸ்ரீ (ம-ரா-ரா-ஸ்ரீ) என்று முன்னர்த் தொடங்கிப் பின், கருதிய விடயங்களை அவர்கள் இதழில் வரைந்துவருதல் கண்கூடு. அங்ஙனமாகவே, ஒருவர் மற்றுத் தக்காரொருவர் பெயரைக் கூறுமிடத்தோறும் அவ்வுயரிய தொடர்மொழி நடப்பதும் காண்கின்றோம். இன்னும் சிலர், அவ்வமயங்களில் "ப்ரஹ்மஸ்ரீ" என்றும், சிலர்; "ஸ்ரீலஸ்ரீ" என்றும், சிலர், "ஸ்ரீமான்" என்றும், சிலர், "ஸ்ரீமது" என்றும், சிலர், கருத்துக்கியைந்தவாறும் எழுதியும், கூறியும் வந்தமை வருகின்றமை உணர்கின்றோம். ஆராயுமிடத்து இவைகளெல்லாம் வடசொல் நிறைந்த தொடர்களேயாம்.

இனி, நம் தமிழ் மொழியில் நன்மாணுழைபுலம் வல்லார் பலர், "திருவாளர்" என்னும் இவ்வருமருந்தன்ன ஒரு பெருஞ் சொற்றொடரை, முற்கூறிய அவ்விரண்டிடத்தின் கண்ணும் முறையே பொறித்தும் உரைத்தும் வருகின்றனர். இங்ஙன், இந்த இனித்து வளரும் தனித்தமிழ் மொழியானியன்ற "திருவாளர்" என்னும் சொற்றொடர் மேற்காட்டிப் போந்தனவற்றுள் நனி சிறந்ததென்பதொருதலை. எங்ஙனமாலோவென்னிற் கூறுதும். திரு+ஆள்+அர் = "திருவாளர்" என இயைந்து நின்ற இது, அழிவில் இன்ப அரும் பெரும் பொருட்கு உரிமையாய் நிற்கும். இது இம்மை, மறுமை வீட்டிற்கொரு பற்றுக் கோடென்பது அடியிற்காட்டும் ஆராய்ச்சியினுல் அறிதற்பாலது.

சாலிவாகன சகம், ௧0௪0-வரை ஆரும் பரவும் ஆரூரின்கண் அரசுவீற்றிருந்து ஆணைசெலவுய்த்த அநபாயச் சோழ அரசன் காலத்தே (சற்றேறக்குறைய இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகட்கு முன்னே) இருந்த அருண்மொழித் தேவர் என்னும் அழகிய திருநாமம் வாய்ந்த "திருவாளர்" சேக்கிழார் பெருமானார், தாம் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணத்தில் நான்கிடங்களில், "திருவாளன்" என்ற பெருந்தகைமை வாய்ந்த தொடர் மொழியை எடுத்தாண்டனர்.

அவை:—

௧. திருநாவுக்கரசு சுவாமிகள் சூலைநோயால் அறவே வருந்துங்காலையில், அது தீர்வு கருதித் திலகவதியம்மையார், அவர்க்குத் திருநீறு அளிக்கும் அற்றத்து அத்திருநீற்றின் ஏற்றம் தோன்ற,

> "**திருவாளன்**" திருநீறு திலகவதி யாரளிப்பப்
> பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
> குருவார வணிந்துதமக் குற்றவிடத் துய்யுநெறி
> தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் றாம்வந்தார்"

(பெரிய—௬௭) - என்றும்,

உ. திருஞானசம்பந்த சுவாமிகள் மூவாட்டைப் பருவத்தில் மலையரசன் குமரியின் திருமுலைப்பாலுண்டு திருவருட்பேற்றிற் கிலக்காகித் "தோடுடைய செவியன்" என எடுத்து அருநெறி, பெருநெறி, ஒருநெறி, திருநெறி ஆகிய தமிழ்மறை மாலை தொடுத்து முடித்த அமையத்து,

" திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
யிருக்குமொழிப் பிள்ளையா ரெதிர்தொழுது நின்றருள
அருட்கருணைத் திருவாள னாருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமழை மலர்பொழிந்தார் "

(அ.) என்றும்,

ங. பின்னரும், ஞானசம்பந்தப் பெருந்தகையார் திருப்பாசூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானார் திருப்பெயர்ச்சீர் தோன்ற

" திருப்பாசூ ரணைந்தருளி யங்கு மற்றச்
செழும்பதியோ ரெதிர்கொள்ளச் சென்று புக்குப்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா கத்துப்
புராதனர்வே யிடங்கொண்ட புனிதர் கோயில்
விருப்பினுடன் வலங்கொண்டு புக்குத்தாழ்ந்து
வீழ்ந்தெழுந்து மேனியெலா முகிழ்ப்ப நின்றே
யருட்கருணைத் திருவாள னமஞ் சிந்தை
யிடையாரென் றிசைப்பதிக மருளிச் செய்தார் "

—கOகங—என்றும்,

ச. சுந்தரமூர்த்தி சுவாமிகளது செயற்கரிய செய்கைகள் பலவற்றுள்ளும் இது விழுமியதென்பது தோன்றத் திருப்புக்கொளியூர் என்னும் திருப்பதியில் முதலையுண்ட மதலையை அழைத்த அற்றத்து,

"பெருவாய் முதலை கரையின்கட் கொடுவந் துமிழ்ந்த பிள்ளைதனை
யுருகா நின்ற தாயோடி யெடுத்துக் கொடுவந் துபிரளித்த
திருவா ளன்றன் சேவடிக்கீழ்ச் சில மறையோ னெடுவீழ்ந்தாள்
மருவார் தருவின் மலர்மாரி பொழிந்தார் விசும்பின் வானோர்கள்."

—கஉ—என்றும் வரும்.

ஆகவே, தெள்ளுதமிழ் வள்ளலீர் !

சேக்கிழார் பெருமானர் காட்டிய நெறியே தக்கா ரிவ ரெனக் காணுமிடந்தோறும், மேலே எடுத்துக்கூறிய இரு அமை யங்களினும் **திருவாளர்** என்னுந் தொடரையே தந்து வரு தல் சாலச் சிறந்ததெனப் புலப்படுதல் காண்க. நலம்! நலம்!!

M. முருகைய வாத்தியார்.

உ

ஒரு பெரியார் நல்லுரை.

தாங்கள் விடுத்த 'தமிழ்ப் பொழில்' முதலிரண்டு மலர்களும் பெற்று மகிழ்ந்தேன். தாங்களும் ஏனைக் கற்றறிஞரும் எழுதி யிருக்கும் தமிழ்க் கட்டுரைகளை உற்று நோக்கி வியந்தேன். 'தமிழ்ப் பொழில்' நீடு நின்று நிலவுமாறு முயல்க! ஏனெனில், இஞ்ஞான்று பற்பல இதழ்கள் தோன்றித் தோன்றி மறைகின் றன. மேலும், வடசொற்கள் சிறிதும் விரவாத தனித்தமிழி லேயே தாங்களும் மற்றைக் கல்வியறிஞரும் கட்டுரைகள் எழுது வதை விடாப்பிடியாய்க் கைக்கொள்ளல் வேண்டும். .... வடசொற் கலப்பால் தமிழைப் பாழாக்க மடிகட்டி நிற்கின்றனர். ஆதலால், நம்மனோர் தமிழில் வடசொற்கலத்தற்குச் சிறிதும் இடம் விட்டுக்கொடுத்தல் ஆகாது. தமிழ்மொழியை விட்டால் தமிழர்க்கு வேறு சிறப்பில்லை. தங்கள் முயற்சி நன்கு நடை பெறுக வென்று திருவருளை வேண்டும்

மறைமலையடிகள்.

உ

நக்கீரர்.

ஒரு நாடகம்.

நடிகர்.

வங்கிய சூடாமணி :—பாண்டிய மன்னன்.

நக்கீரர் :—கடைச்சங்கப் புலவர் தலைவர்.

இடைக்காடனார்
கல்லாடனார் } சங்கப்புலவர்கள்.

தருமி :—ஓர் ஆதிசைவச் சிறுவன்.

ஆலவாய்ப் பெம்மான் ;—ஓர் புலவர்.

மதிவாணன்
மணிவண்ணன் } இரண்டு நண்பர்கள்.

அமைச்சர், ஏனைப்புலவர், வாயிலோர், வினையோர், கற்றுச் சொல்லிகள், நகரத்தார் முதலாயினர்.

களம் :—மதுரையும், மதுரையைச் சார்ந்த இடமும்.

காலம் :—இளவேனில்.

உ

நக்கீரர்.

களம் ஒன்று: மதுரைப் புறநகர்.

நடிகர்-மதிவாணன், மணிவண்ணன், மற்றொரு நகரத்தான்.
காலம்-மாலை. வேனிற்காலத்து மாலைப்பொழுது.

மதி— வருக மணிவண்ண! நினக்கு வணக்கம். யாண்டுச் செல்கின்றாய்?

மணி—மதிவாண! நின்னைக் கண்டு பலநாட்களாயின. யான் பூங்காவைநோக்கிப் புறப்பட்டேன். நீயோ?

மதி— யான் வையைக் கரையினை நோக்கிப் புறப்பட்டேன். ஆயினும் இப்பொழுது நின்னுடன் வருகின்றேன். உன்னோடு அளவளாவிப் பலநாட்கள் கழிந்தன. உன்னை நோக்கின் ஏதோ ஆழ்ந்த எண்ணத்துடன் வருதல் தோன்றுகிறது. புதுமை ஏதேனும் உண்டோ?

மணி—உண்டு. மன்னர்மன்னனாகிய நமது வங்கியசூடாமணிச் சண்பகமாறனை நினைக்குந்தொறும் யான் என்னை மறந்து விடுகின்றேன். எனதுஉள்ளம் அவன்பாற் சென்று விடுகின்றது. அவனது அன்பே யன்பு!

மதி— சண்பகமாறன் என்கின்றனையே! நமது அரசனுக்கு அப் பெயரும் உண்டோ?

மணி—மதிவாண! நமது அரசனைப்பற்றி நினக்கு ஒன்றுந்தெரியாதுபோலும். அவர் குணத்தைஎன்சொல்கேன்! அன்பை என்னென்றுரைப்பேன்! அவர் குணத்தின் குன்று. அன்பின் வடிவம்.

மதி— நீ அரண்மனையில் மிக்க பழக்கம் உள்ளவன். பெரிதும் உணர்ந்திருக்கின்றாய். எனக்கு அரசனைப்பற்றி அவ்வளவு தெரியாது. ஆகையால் அருள்கூர்ந்து நமது அரசனைப் பற்றிச் சிறிதுகூற உடன்படுவாயா?

மணி—நின்றுகூறினை! உன்விருப்பிற்கு நான் எப்பொழுதேனும் இணங்காமலிருந்ததுண்டோ? அரசனைப்பற்றிக் கூறென்றால் கூறுதொழிவனோ? அன்றிக் கரும்புதின்னக் கூலியும் வேண்டுவனோ? நின்னிடத்தன்றி வேறுயாரிடத்து யானிதனைக்கூறுகேன். திருமாடக்கூடலாகிய இவ்வழகிய நகரம் நம்மன்னனுடையபுகழாலன்றோ இன்னணம் பொலிந்துநிற்கின்றது. இதுபோது இத்திசையினின்று

ஒருமணம்வருகின்றதன்றே ? அது நம்மன்னனின்பூங்கா வினின்றும்வருகின்றது. ஏனை அரசர்களைப்போல் இள வேனிற்காலத்தில் பொழுதுபோக்கிற்காக நமது அரசன் இவ்வனங்களை வைத்திருப்பதில்லை. இவ்வனங்களில் மாதவி, பாதிரி, தாதகி, கூவிளம், மந்தாரம், மல்லிகை, முல்லை, இலஞ்சி, கோங்கம், கரந்தை, கொன்றை, புன்னகம், முண்டகம், நீலம், வாகைமுதலிய மலர்கள் தாத விழ்ந்து எப்போதும் கமழ்கின்றன. இவையேயன்றித் தனிமையாகச் சண்பகவனமொன்றையும் அரசன் வளர்த்து வருகின்றான். நாடோறும் அவ்வனத்திற் பூக்கும் சண்பகமலர்களைக்கொண்டு, தொடை, கண்ணிமுதலிய பலமாலைகளைத்தொடுத்து ஆலவாய்ப்பெருமானுக்குச் சூட்டிவருகின்றான். பெம்மானிடத்து அரசனுக்குள்ள அளவிலா அன்பினை அவனது இச்செயலேதெள்ளிதின் உணர்த்துகின்றது. இதனாலேயே சுந்தரவிடங்கப்பெருமானுக்குச்சண்பகசுந்தரரென்றும், அவரைஇடைவிடாது மனமொழிமெய்களால் வழிபட்டுவரும் நமது அரையன் வங்கிய சூடாமணிக்குச் சண்பகமாறன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இன்னும் நமது அரசனுடைய பெருமையினைப்பற்றிச் சொல்லுவதானால் அது இரண்டொரு நாழிகையில் அன்று: இரண்டு நாளினும் முடியாது.

மதி- அன்ப! நம்மன்னனைப்பற்றி இத்துணை யானிதுவரை அறியாமலிருந்ததற்காக மிகவும் வருந்துகின்றேன். அரசன் சுந்தரப்பெருமானிடத்துப் பேரன்பு கொண்டவனென்று பலர் சொல்லக்கேட்டிருக்கின்றேன். ஆயினும் இப்பொழுதுதான் விளக்கமாக வுணர்ந்தேன். யானிப்பொழுது உன்னுடன் வந்தமையால் எனக்குக்கிடைத்த பயனிது. ஆகையான் யான் இனி அடிக்கடி நின்னைக் காண்பேன். நிற்க, யானொன்று கூறுகின்றேன்:—நமது சங்கப் புலவர்களும் ஆலவாயண்ணலை இடைவிடாது வழிபடுகின்றவர்கள்தாம். அவர்கள் பெற்றுள்ள செய்யு

ளாற்றல், அவர்கள் இறைவனிடத்துக்கொண்டுள்ள மெய்யடிமைத் தொண்டினுற் போந்தது என்றே கருதுகின்றேன்.

(மற்றொரு நகரத்தான் வருதல்.)

நக— ஐயன்மீர்; தாங்கள் என்வரவைக்கண்டு தங்கள் பேச்சை நிறுத்திவிட்டீராதல் தோன்றுகிறதே! முடிவாகத் தாங்கள் நமது சங்கப்புலவர்களைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தீர்களல்லவா?

மதி— ஆம், ஆம். அவர்களைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தோம்.

நக— யான் அவர்களைப்பற்றிக் கெடுதலாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனுல் அவர்கள் வரவரத் தற்புகழ்ச்சியினுற் செருக்கடைந்திருக்கிறுர்களென்பது எனக்குத் தோன்றுகின்றது.

மணி—நீங்கள் யாரையா? இவ்வாறு இடிவிழுந்தாற்போலத் திடீரென்று பேச வந்துவிட்டீர்கள்? புலவராயினுர்மேற் குற்றஞ் சாட்டுதற்குத் தாங்களும் ஒரு புலவரோ?

நக— ஐயா! கோபம் வேண்டாம். யான் அவ்வளவு கற்றவனல்லன். இருப்பினும், பலர் இவ்வாறுபேசிக்கொள்ளுகின்றனர். புலவர் தலைவராக விளங்கும் நக்கீரர் மிகவும் செருக்குள்ளவர் எனவும் பேசிக்கொள்ளுகின்றனர். யான் இதனைத் துணிவாகக் கூறுவதற்குக் கோபம் கொள்ளல் கூடாது.

மதி— (மணிவண்ணனை நோக்கி) நண்ப! நாழிகையாயிற்று. நாம் செல்வோம் வருக. ஐயீர்! தாங்கள் செல்லலாம். (நகரத்தான் செல்லுதல்)

மணி—மதிவாண! அதோபார். நமது அரசர் தலைவியுடன் செல்லுகின்றுர். சண்பகவனத்தையடுத்துள்ள செய்குன்றுக்குச் செல்லுதல் வழக்கம். இப்போதும் அங்கேதான் செல்கின்றுர் போலும்.

மதி— வெகுநேரம் பேசிக்கொண்டே வந்துவிட்டோம். நாழிகை யாகிவிட்டது. செல்வோம் வருக.

மணி—பேச்சினால் நேரத்தையும் மறந்துவிட்டோம்.

களம்-இரண்டு. செய்குன்று.

காலம்—மாலை.

நடிகர்-சண்பகமாறன், தேவி. (தேவியார் பால்வீற்றிருக்கின்றாள்.)

சண்பக மாறன்—(களத்தில் உலாவல்.)

ஆகா என்ன அழகு! என்ன அழகு! இச்செய்குன்றினின்றும் பார்ப்போருக்கு நமது பூஞ்சோலைகளின் பெருமை புலனாகாதிருக்குமென்றே நினைக்கின்றேன். இவைகளின் தோற்றத்தைப் புலவர் புனையா திருப்பார்களோ? இயற்கை இயல்பாகவே மிகவும் அழகுடையதாயினும், செயற்கையாலன்றோ மிகவும் பொலிந்து காட்டுகின்றது? இவ்வனங்களை யான் வளஞ்செய்யாவிடின் இவ்வியற்கையின் அழகு இவ்வாறு பொலியுமோ? ஓ! இப்போது வீசுந் தென்றல் செயற்கையினைத் தாண்டிநிற்கின்றதே? இத்தென்றலுக்கும் இவ்வசந்தத்திற்கும் உள்ள உறவே உறவு! ஆயினும், இவைகளை யானுண்டாக்க வில்லையே? பெருமானுடைய ஆக்கலழகை யாரே மதிக்க வல்லார்? வனங்களை யான் வளஞ் செய்தேனெனினும் எம்பெருமானுடைய அருளன்றோ இத்தகைய பூக்களாத் திகழ்கின்றது. அன்றியும், பெருமானுடைய அருளிருந்தாலன்றி யானொன்று செய்தலும் உண்டோ? எனது மடமையே மடமை!

வழுவிலா துன்னை வாழ்த்தி வழிபடுந் தொண்ட னேனுன்
செழுமலர்ப் பாதங் காணத் தெண்டிரை நஞ்சமுண்ட
குழகனே கோல வில்லி கூத்தனே மாற்று யுள்ள
அழகனே யாலவாயில் அப்பனே யருள்செய் யாயே!

ஏதோ இப்பொழுது இவ்விடத்துப் புதுவதோர் மணம் வீசுகின்றதே! பூங்காவிலிருந்து தென்றல் கொண்டுவரும் வாசமோ இது? பூவின் மணமுமில்லையே! அன்றிக் காற்றுக்கும்

மணம் கிடையாதே. புதுமையாகவன்றே இருக்கிறது! (திரும்புதல்) ஓகோ! நமது தேவியின் கூந்தலினின்றும் புறப்பட்டதிது. பூவின் வாசனையினும் கூந்தல் வாசனை சிறப்புடையதாகவே தோன்றுகிறது. இருப்பினும், கூந்தலுக்கு இம்மணம் பூவின்சேர்க்கையால் வந்திருத்தலாகாதோ? அன்று. இயற்கையாகவே ஏற்பட்டதுதான். எனினும், இதனை நமது புலவர்கள் பாற்கேட்டறிவோம். அவர்கள் ஆலவாயண்ணலின் அருளை முழுதும் பெற்றவர்கள். அவனது அருளைப் பெற்ற அவர்களால் ஆகாத தொன்றுமில்லையாகும். அவர்களுக்கு விளையுந் தீங்குமில்லையாகும்.

கைதவன் கரந்து வைகுங் கடலைவெற் படக்குங் கையிற்
பெய்துமுந் தெல்லைத் தாக்கிப் பருகினன் பிறைசேர் சென்னி
ஐயன தருளைப் பெற்றார்க் கதிசய மிதன்கொல் மூன்று
வையமுத் தொழிலுஞ் செய்ய வல்லவ ரவரே யன்றே.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்
டுனமொன் றில்லா வொருவருக் காட்பட்ட வுத்தமர்க்கே.

களம்-மூன்று. நகரத்தெரு வொன்று

காலம்-காலை

நடிகர்-அரசன் வினைஞர் இருவர்.

(களத்தில் இருவரும் ஒருபக்கமாகத்தோன்றுதல்)

முதல்வன்— வா அப்பன்! நமது தலைவர் சொன்ன வேலையைச் செய்துவிட்டு வருவோம்.

இரண்டாமவன்— அதென்னவேலை? எனக்குச்சொல்.

மு— இதோபார் இந்தமுடிச்சில் ஆயிரம் பொன் இருக்கின்றன.

(தொடரும்)

மு. கோவிந்தராய நாட்டார், B. A.,

வ்

திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்கள்.

(முற்றொடர்ச்சி)

(க)

காலம்:—பராந்தகசோழதேவரது நான்காம் ஆண்டு.

இடம்:—கர்ப்பகிரகத்தின் தென்புறம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி வம்மற்கு யாண்டுநான்காவது வடகரை அண்டாட்டுக்கூற்றத்து நீங்கியதேவதானம் திருப்புறம்பியத்து திருப்புறம்பியமுடைய மகாதேவற்கு இருமடி சோழவணுக்கர் செய்வித்த இவ்வூர் திருநந்தவானமண்டலங் (2) காப்பார்க்கு நந்தவாநபுறமாக இன்நம்பர்நாட்டு பிரமதேயம் வாநவன் மகாதேவி சதுவேதிமங்கலத்து மத்யஸ்தந்நூற்றெண்மன் வலியந்னை திருப்புறம் சோழவணுக்கபெருங்காவிதி……………………ராஜகேசரிவதிக்கு (3) கிழக்குவாநவன் மகாதேவிவாய்க்காலுக்கு வடக்குமுதல் கண்ணாற்று முதலாவது ரத்துகாலே அரைமாவரைக்காணி யுமிவ்வதிக்குக் கிழக்கு தாமத்தவாய்க்காலுக்கு வடக்குஅரைமா வரைக்காணி முந்திரி…………லம் அறுமாக்காணி முந்திரிகை நிலமும் விலைப்பொருள் கழஞ்சில் லொடொக்க (4) லந்நூற்றுக் கழஞ்சும் இவ்விரும (5) டிச்சோழ வணுக்கரிடை அறக்கொண்டு இத் (6) திருப்புறம்பியத்துத்திருநந்தவானம் (7) மண்டலங்காப்பானை திருநந்தவானம் (8) புறமாக மாதவி குஞ்சரமல்லன்இத் (9) திருக்கற்றளி பிச்சர் கண்காணியொடும் இச் (10) செய்யில்…………இவன்சந்திராதிச்ச (11) வல்இத் திருநந்தவாநத்துக்கு அளிப்பார்களாக (12) வும் இந்நிலம் கோடீக்கி இவன் கண்காணிச்சு சந்திராதித்தவல் காத்தூட்டப் (13) பெறுவதாகவும் இப்பரிசு இந்நிலங் கொண்டு திருநந்தவாநப் புறம் செய்து (14) குடுத்தோம் இவ்விருமடி சோழபெருபடைபடையோம் இவ்வாரம் பன் மகேஸ்வர (15) லக்ஷ இவ்வாங் காப்பார் ஸ்ரீ பாதம் எங்கள் தலைமேல்— நன்றாக

(உ)

காலம் :—முதல்குலோத்துங்க சோழதேவரது ௪௰௩ ஆம் ஆண்டு.

இடம் :—கர்ப்பகிரகத்தின் தென்புறம் கீழ்ப்பாகம் I ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்குயாண்டு ௪௰௩-வது உலகுய்யவந்த சோழவளநாட்டு அண்டாட்டுக்கூற்றத்து திருப்புறம்பியமுடைய மஹாதே...... ....பங்குனித்திருநாளும் திருவேட்டையும் திருத்தாமம் பிரசாதித்தும் அமுது செய் II தருளி அடியாற்கு வழக்கத்துக் கும் திருவமுதரிசி குள கலனே நாழி உருக்கி நெல் ௰௩ள இரு தூணி குறுணியும் கறியமுது நெய்யமுது தயிரமுதுக்கும் உள குறுணிநாழி...........கும் திருவமுதுக்குமாக ஸ்ரீ பராந்தக சதுர் வேதிமங்கலத்துத் தென்பிடாகை III திருவெள்ளறை நல்லூர் வெள்ளாளர் அரிவாள் தாயனும் சிறுத்தொண்டரும் உள்ளிட்ட ஊரார் திருத்து கொல்லையுட்பட நிலம் நாலுமாவுக் கும் கொல்லை......................காசஉட்பட இறுக்கு நெல் ௬ கலனே ௬ம் இறுத்து மிகுதியால் உள்ளித்............................ IV......................நிவந்தஞ் செலுத்தவேணும் ஸ்ரீ ஜெயங் கொண்ட சோழபுரத்திருக்கவாணதிராஜர் விண்ணப்பஞ் செய்ய இப்பரிசு இத்திநம் செய்கைக்குக் கல்லிலும் செம்பிலும் வெட்டுக என்று திருவாய்மொழிக்தருள திருமுகப்படி கல்லு வெட்டி.......................

T. V. சதாசிவப்பண்டாரத்தார்.

திருவாசகச் சிற்றாராய்ச்சி.

திருவாதவூரர் காலம்.

செல்வி நகர்ப் பெரும்பற்றப்புலியூர்நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் சைவசமயாசாரியரை,

> "படிபுகழ் சண்பை வேந்தர் மலரடி போற்றி! பத்தி
> வடிவுடை யியல்தேர் நாவுக் கரசடி போற்றி! மாலை
> முடிகொள்சுந் தரர்தாள் போற்றி! மூதுரை வாத வூரர்
> அடியிணைபோற்றி மற்றோருங் கடியவ ரடிகள் போற்றி!"
>
> (கடவுள் வாழ்த்து—21)

எனத் துதிசெய்கிறார். தேவாரம் பாடிய முத்திறத்தாரையும் போற்றிப் பின் வாதவூரரைப் போற்றுங்கால் மூதுரை வாதவூரர் என்றது மாணிக்கவாசகர் மூவருக்கு முன்னவர் என்பது மாத்திரமன்றி, நீண்ட பழையகாலத்தவர் என்பதையும் உணர்த்தும். இம்மேற்கோள் எத்துணைப் பொருந்தும் பொருந்தாது என்று தற்கால ஆராய்ச்சியாளர் ஆராய்ந்ததாகத் தெரியவில்லையாதலின் இங்கெடுத்துக் காட்டப்பட்டது.

செல்வி நகர்ப் பெரும்பற்றப்புலியூர்நம்பியார் பரம்பரையில் வந்த ஆனந்தத் தாண்டவ நம்பி கற்பாள்? அங்கயற் கண்ணம்மை சந்நிதிக் கோபுரம் கட்டினர் என மதுரைத் திருப்பணிமாலையின்

> "கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்வி நாடன் கவுணியர்கோன்
> நன்னர்க வெண்ணிய வானந்தத் தாண்டவ நம்பிகற்பாள்
> தென்னவர் போற்றிய வங்கயற் கண்ணம்மை செல்விதிருச்
> சன்னிதிக் கோபுரங் கட்டினள் தன்மந்தழைக்கவென்றே" எனும்

பாடல் காட்டுவதாலும், அக்கோபுரம் கட்டினகாலம் கி. பி. 1227-1228 என்று மதுரைக் கோயிலொழுகு அறிவித்தலாலும் இப்பழைய திருவிளையாடற் புராணப் பதிப்பாசிரியர் மகா மகோபாத்தியாயர் உத்தமதானபுரம் **வே. சாமிநாதையர் அவர்கள்** பெரும்பற்றப் புலியூர் நம்பிகாலம் இன்றைக்கு 700 வருடங்களுக்கு முந்தியதென்றார். மற்றும் பெரும்பற்றப்புலியூர் நம்பி தன் ஆசிரியரை,

"வரந்தருந் தொல்லைத் தில்லை மாளிகை மடத்து மன்னும்
அருந்தவமுனி வெண்காடன் அருள்விநாயகன் மனத்தாற்
பரிந்தெனை யாண்டு கொண்ட படர்சடைக் கடவுணீதி
திருந்திய பரமஞான சிவனடி சென்னி சேர்ப்பாம்"

எனத் துதித்து, தன்னை வெண்காடர் மாணவரான விநாயகரின் மாணவராகக் கூறினர்.

வெண்காடர் பட்டினத்தடிகளே. பட்டினத்தடிகள் பாடல்களைப் பதினோராந் திருமுறையுள் தொகுத்தருளிய நம்பியாண்டார்நம்பிகாலம் கல்வெட்டுக்களினின்று பத்தாவது நூற்றாண்டின் இறுதியிலும் பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கொள்ளப்படுவதால், பட்டினத்தடிகள் காலம் பத்தாவது நூற்றாண்டுக்குப் பிந்தியதன்று. ஆதலின், பெரும்பற்றப்புலியூர் நம்பிகாலம் 11-வது நூற்றாண்டு—அதாவது இற்றைக்கு எண்ணூறு வருஷங்களுக்கு முன் என்று கொள்வதில் குறை ஏற்படாது.

இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர்கள், நால்வரில் யாவர் முன்னவர், யாவர் பின்னவர் என்று பொதுவாகவே அறிந்து கொள்வது இயற்கையும் எளிதுமாகும். மேலும் இப்போது அநேகர் கருதுமாறு மாணிக்கவாசகர் ஒன்பதாவது நூற்றாண்டில் வாழ்திருந்தனரேல் பதினோராவது நூற்றாண்டில் இருந்த பெரும்பற்றப்புலியூர்நம்பி தமக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த அடிகளை "மூதுரை வாத

ஆரர்" எனச் சொல்லத்துணிவரோ? வழிமுறையாக மாணிக்க வாசகரை மூவருக்கும் முன்னவர் என்று சொல்வதற்குப் பெரும் பற்றப்புலியூர்நம்பி சான்றுவர்.

(தொடரும்.)

இராவ்சாகிபு சு. வி. கனகசபைப்பிள்ளை.

உ

கடவுள் துணை.

பாரத மகிமை.

(தண்டமிழ்த் தொண்டன்.)

பாரதத்தாய்.

உ

(2) அன்னையே பாரத அன்னையே என்றும்
இனியதாந் தோற்றப் பொலிவொடு கனியும்
நின்வெளி யழகே நன்மனச் செம்மையே
அமைதியே மகிழ்வே கமையே மெய்யாந்
தன்மையே யென்றிவை தம்மைத் தரணிவாழ்
மக்க டம்மை மாறியு மிக்கதாக்
கொண்டுயர் வெய்துக வென்றகங் கனிந்து
காட்டுவான் பெரிதும் வாட்டமுற் றுழலும்
பலதிறப் பட்ட வுலகக் காட்டில்
நறுமண மிகுந்து தருணத் தலர்ந்த
நிலத்தா மரையாய் நின்றொளிர் கின்றனை
என்றும் பொன்றுப் புகழுட னன்றே
இலகும் முலகத் திராணி யாகுநீ
தந்நல மிகுத்த வன்மனத் தினராம்

அன்பிலர் செய்யுந் துன்பினிற் பெரிதும்
தாக்குற் றமைதி போக்கிப் புண்பட்
டுடலம் பதைத்தின் றுருக்குலை வுறினும்
கற்றாய்ந் தடங்கி முற்றா தலையும்
மேனாட் டார்த மூனக் கொள்கையை
உண்மையாக் கொண்டுன் றிண்மைசே ருயரிய
நன்னிலை மறந்த வின்னிலை யாமோ
அன்பமர் மனனே யருள்பொழி நோக்கே
இன்பவீ டருளுந் தன்னிக ரறிவே
ஆதியா நின்சீ ரோதுநால் வேதமே
என்று மாறா விளமையே தூய்மையே
எழிலே காணற் கினிமையே பழமைநின்
செந்தா மரையடி வந்தனைப் பேறே
என்றிவை பெற்றீண் டின்புறூஉம் பொழுதும்
அழிதரு முடலே பொருளே பிறவே
இவற்றிற் பற்றுந் தவப்புகழ் மெய்யில்
வெறுப்பும் பொய்யில் விருப்பு மாந்தர்
கொண்டுழல் வதுபெருங் குணமோ
கண்டனை தடுத்தாட் கொண்டளித் தருளே.

(௩)

தாயே யாருயிர்த் தாயே யாண்டும்
தன்னே ரில்லா நின்சே தரிமார்
தம்முண் மேலாந் தரத்தினைப் பெற்றாய்
வேண்டிய வேண்டியாங் கீண்டியா ரெவர்க்கும்
தரவல தகுதியை யுரியசி தனமா
வேண்டினை விரும்பி யாண்டவ னருளால்
பெற்றாய் தெய்வத் தன்மையைப் பெற்றாய்
பாரதத் தேவி யாருயிர்த் தாயே
மாசற் றிலகுந் தேசார்ந் திமமார்

மலையா முயரிய மணிநிறை முடியே
பலநிலத் தவரும் வலமதாய் நின்சீர்
பரவுவ தேய்ப்பக் கரவிலா தலைக்கைக்
கடற்றிறை வருடப் படக்கிடந் தொளிரும்
திருவடி மலரே யரியநல் வாழ்க்கைக்
கினியசெங் கதிரே புனிதநீர் மழையே
இயற்கைதன் வலியாற் செயற்கையின் மரகதப்
போர்வைபொத் தன்னா யார்வத் தனித்தேன்
ஏற்றருள் புரிவாய் நாற்றிசை போற்றவென்
றெவ்வோ ராண்டும் வெவ்வே றுருவில்
நவநவ மாகச் சவிபெறச் செய்யும்
பலமணிப் பயிரார் நலவிளை நிலனே
மழைமின் மானத் தழைத்தலர் பொழிலே
என்றபே ரெழிலார்ந் தென்றுங் கொலுவிற்
றிருக்கின் றனைநின் விருக்கே முதலாம்
நற்றவத் தினராய்ந் துற்றளித் தனபல
கல்வியின் பயனா நல்லிசை கேட்க
நறுமலர்ப் படிந்து வருமிளந் தென்றற்
கவரிகால் வீசக் கவினார் பொன்னேர்
முகமலர் கின்றனை முறுவல்பூத் துவந்தே
அறிந்தனை மடியேம் பெருந்திற லுறுமைம்
பெரும்பூ தங்க டிருந்தச் செய்யும்
பணிகளென் றுள்ளத் துணிவுகொண் டவற்றை
அன்னாய் நின்சீ ரகடுதித் தமர்ந்துன்
பொன்னடி மலரைச் சென்னியின் வணங்கும்
பெரும்பே றெளிதோ பெற்றேம்
விரும்பிய பெறுவேம் விழைந்தருள் நீயே.

ஒரு வாழ்த்து.

தஞ்சாவூர் நாட்டாண்மைக் கழகம் வாழிய !

நமது பொழிலில்—தாய் மொழியின் முன்னேற்றத்திற்குரிய பல வகையான கட்டுரைகள் எழுதவேண்டும் இன்றியமையா மையிலிருந்தும், 'நாட்டாண்மைக் கழகங்'களின் சார்பிலுள்ள நாட்டுப்புறப் பள்ளிக்கூடங்களின் கல்விபற்றிச் சென்ற இரண்டு மலர்களிலும் 'முற்கட்டுரைகள்' எழுதிவருதலை அன்பர்கள் உணர்வர். மேலும், நமது பொழிலில், இங்ஙனமே நாட்டுப் புறப் பள்ளிக்கூடங்கட்குரிய பலவகைக் கட்டுரைகளும் தொடர்ந்து எழுதிவரும் எண்ணம் மிக்குளேம்.

நாட்டாண்மைக் கழகங்களுள் கல்வி நெறியால் முன்னிற்பதாகிய தஞ்சை நாட்டாண்மைக் கழகம், நமது பொழிலினை மிகவும் போற்றிவர முன்வந்திருக்கின்றது. நமது பொழிலினைத் தனது ஆட்சியிலுள்ள ஐம்பது பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவர ஆணை தந்துளது. இவற்றுள், இருபத்தைந்து பள்ளிக்கூடங்கட்கு ஆயுள்வரி தந்து, அனுப்பிவர ஆணையிட்டிருப்பது மிக, மிகப் போற்றற்குரிய தொன்று. இக்கழகத்திற்கு நமது மனநிறைந்த நன்றியுணர்வினைத் தெரிவித்து, இதனை மனமார வாழ்த்துகின்றும் நாளடைவில், கழகம், தன் எல்லையிலுள்ள நூற்றுக் கணக்காய எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் ஆயுள்வரி முறையில் பொழில் அனுப்பிவர ஆணைசெய்யுமென்று எண்ணியுளேம்.

வேண்பா.

வாழி வளர்தஞ்சை மாநாட்டாண் மைக்கழகம்
வாழி பதன்றலைவர் மாவள்ளல்—வாழிபரோ
அன்ன கழகத்தின் அங்கமாஞ் செல்வரெலாம்
என்ன நலமு மியைந்து.

இதழாசிரியர்.